

# ஊழலுக்கு எதிராக குரல் கொடுங்கள்

## குடிமக்களின் கையேடு

TRANSPARENCY
INTERNATIONAL
MALAYSIA

வெளியிடுவது:

TRANSPARENCY INTERNATIONAL MALAYSIA

# நாங்கள் குரல் கொடுக்க விரும்புகிறோம் ஊழலை ஒடுக்க

டிரான்ஸ்பிரான்சி இன்டர்நேஷனல் மலேசியா அரசாங்க சார்பற்ற சுயேட்சையான இயக்கம். இது உலகளாவிய தடுப்பு இயக்கத்தின் ஓர் அங்கம்

மேல் விபரங்களுக்குப் பின்வரும் இணையத் தளத்திற்குச் செல்க:

**www.transparency.org.my**

# பொருளடக்கம்


ஊழலைப் பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன? 3

ஊழல்: விளக்கமும் அதன் விளைவுகளும் 5

குற்றங்கள், அறிவிப்பவருக்கும் புகார் செய்பவருக்கும் கிடைக்கும் அடைக்கலம் 15

ஊழல் புள்ளி விபரம் 23

அரசாங்கம் மற்றும் மலேசிய டிரான்ஸ்பிரன்சி இன்டர்நேஷனலின் முயற்சிகள் 31

ஊழலுக்கு எதிராக நீங்கள் என்ன செய்ய முடியும்? 41

பெரும்பாலும் கேட்கப்படும் கேள்விகள் 45






# ஊழலுக்கு எதிராகக் குரல் கொடுங்கள்



டிரான்ஸ்பிரன்சி இன்டர்நேஷனல் - ஊழலைத் துடைத்தொழிக்க மலேசியா உங்களோடு கரம் கோர்க்க விரும்புகிறது.

காதாகவும் கண்ணாகவும் செய்லபடுங்கள். ஊழலுக்கு எதிராகக் குரல் கொடுக்க எச்சரிக்கையாக செயல்படுங்கள்.

குற்றச் செயல்களுக்கு எதிராக எழுதிப் புகார் கொடுப்பது, சுதந்திரத்தின் இயல்பாக நீடிக்கும் வெளிப்படு. ஊழல் பாதிப்பின் ஆழத்துக்குச் சென்று மக்களின் ஜீவாதாரத்தை கடுமையாகப் பாதிக்கவல்லது. குடிமக்கள் மற்றும் சமுதாயத்தின் நலனைப் பாதுகாப்பது நமது உள்ளாந்த உரிமையாகும்.

1800 22 0122 என்ற எண்ணை அழைக்கவும். இது டிரான்ஸ்பிரான்சி இன்டர்னேஷனல் மலேசியாவில் இலலவச தொலைபேசி சேவை ஆகும். ஊழல் தொடர்பாக உங்கள் புகார் குறித்து நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று இந்த எண்ணில் வழிகாட்டப்படும்.

ஊழலுக்கு எதிரான புகார் கொடுப்பதில் உங்களுக்குத் தகவல் தரவும், ஈடுபடுத்தவும், ஆளுமை வழங்கவும், உங்கள் முயற்சியை வளப்படுத்தவும் இந்தக் கையேடு நோக்கம் கொண்டிருக்கிறது. ஜனங்களே ஊழலைத் துடைத்தொழிக்கும் ஆற்றலை இயல்பாகப் பெற்றவர்கள். மாற்றத்திற்கான உலகளாவிய இயக்கத்தில் உங்களையும் ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.

தரமான மலேசியாவை உருவாக்குவதற்கு ஊழலுக்கு எதிராக இப்போதே செயல்படுங்கள்.

*Dato' Akhbar Satar*

President
Transparency International-Malaysia



# ஊழலைப் பற்றிய உங்கள் நிலைப்பாடு என்ன?






## நீங்கள் எங்கே நிற்கிறீர்கள்?



# ஊழல் என்றால் என்ன?



## சுய ஆதாயத்திற்காக நம்பிக்கையுடன் வழங்கப்பட்ட அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தல்



# ஊழல்களின்
# பல வடிவங்கள்



## உதாரணங்கள்

- ரொக்க வடிவத்தில் பணம் கைமாறுவது
- உடலுறவு தேவைக்காக வற்புறுத்துவது
- சோதனை வினாக்களைக் கசிய விடுவது
- குடும்ப உறுப்பினருக்கு வேலை வாய்ப்பு வழங்குவது
- செல்வாக்கு மிகுந்த தரப்பிடம் இருந்து அரசியல் பலம் வழங்குவதாக வாக்குறுதி வழங்குவது
- களவாடப்பட்ட சொத்துக்களை தேசத்தின் எல்லைக்கு அப்பால் கடத்துவது



# ஊழலினால் ஏற்படும்

# எதிர்மாறான விளைவுகள்



# ஊழலினால் ஏற்படும் எதிர்மாறான விளைவுகள்

## அரசியல்

சட்டத்தின் மதிப்பையும் ஜனநாயக செயல்முறையையும் குறைத்து மதித்தல்

சுயநல ஆதாயத்திற்காக அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் பட்சத்தில் அதிகாரிகள் மற்றும் நிறுவனங்கள் தங்கள் சட்டப்பேற்றை (அதிகாரத்தை) இழக்கின்றனர்.

ஊழல் நிறைந்த சூழலில் நம்பகமான அரசியல் தலைமைத்துவத்தை வளர்ப்பது கடும் சவாலான காரியம்





சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டத்தை அமல் படுத்தப்பட முடியாத நிலைமையில் விலையேறப்பெற்ற இயற்கை வளங்கள் கவனக்குறைவினால் சுரண்டப்படுவதோடு சுற்றுச்சூழல் அமைவுகள் சூறையாடப்படுகின்றன.

உலகலாளிய நிறுவனங்கள் கட்டுப்பாடற்ற அழிவுக்காக தொடர்ந்து லஞ்சம் வழங்குகின்றன.

## சூழமைவு



# ஊழலினால் ஏற்படும் எதிர்மாறான விளைவுகள்

## சமுதாயம்

இலவசமாகப் பெறவேண்டிய சேவைகளுக்காக குடிமக்கள் கட்டணம் செலுத்த கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.

உயிர்களைப் பாதிக்கிறது. பொருள், சேவை தரம் வீழ்கிறது உதாரணமாக, ஆக்கமற்ற நிறுவனங்கள் குத்தகையை வெல்வதற்கு லஞ்சம் வழங்குவதால், அரசியலமைப்பு மற்றும் அதன் தலைமைத்துவத்திற்கு எதிராக மக்களின் நம்பிக்கை குறைகிறது.

நம்பிக்கையிழந்த மற்றும் ஆர்வம் குன்றிய மக்கள் ஊழலை எதிர்ப்பதற்கு இன்னொரு தடையாக உருவெடுக்கின்றனர்.





கடனற்ற நாட்டின் சொத்துடைமை

பள்ளிகள், மருத்துவமனைகள், சாலைகளின் கட்டுமானத்துக்குப் பயன்பட வேண்டிய பொதுச் சொத்து, தனி நபர் பாக்கேட்டுக்குத் திருப்பப்படுகிறது.

நியாயச் சந்தை அமைப்பை தடை செய்வதோடு, போட்டியாற்றலை சிதைத்து முதலீட்டையும் பின்னடையச் செய்கிறது.

## பொருளாதாரம்

i

2001-2002ல் மொத்தம் ஒரு டிரில்லியன் டாலர் மூன்றாம் உலக நாடுகளிலும் முன்னேறிய நாடுகளிலும் லஞ்சமாக வழங்கப்பட்டுள்ளது என்று உலக வங்கி மதிப்பிட்டுள்ளது என்பது உங்களுக்குத் தெரியுமா? மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இது 3 விழுக்காடு ஆகும்.



# குற்றங்களும் தண்டனைகளும்



## குற்றங்கள்

### கோரப்படும் அல்லது பெறப்படும் லஞ்சம்

உத்தியோகப்பூர்வ பறிமாற்றத்திற்கு ஒருவரால் ஊக்குவிப்புத் தொகையாக.

s.16(a)and 17(a) MACC Act 2009

### லஞ்சம் வழங்குதல்

உத்தியோகப்பூர்வ பறிமாற்றத்திற்கு அரசாங்க அல்லது தனியார் துறையில் ஒருவர் லஞ்சம் வழங்குதல்.

s.16(b)and 17(b) MACC Act 2009

### பொய்யான கோரிக்கை

ஒருவர் கட்டணத்தைப் பெறுவதற்காக பொய்யான தகவல் வழங்குதல்

s.18 MACC Act 2009

### அரசாங்க அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தல்

சுய லாப நோக்கத்தோடு அரசாங்க அதிகாரத்தை ஓர் அதிகாரி பயன்படுத்துதல்

s.23 MACC Act 2009

## தண்டனை

### சிறை அல்லது அபராதம்

அதிகபட்சம் 20 ஆண்டு வரை சிறைத் தண்டனை, அல்லது 10,000 ரிங்கிட் அல்லது லஞ்சத் தொகையில் ஐந்து மடங்கில் பெரிதான ஒன்று

s.24 MACC Act 2009



# தகவல் அறிவிப்பாளருக்குப் பாதுகாப்பு



## தகவல் அறிவிப்பாளர் யார்?

அமலாக்கத் தரப்பினரிடம் முறைகேடான நடவடிக்கையை வெளிப்படுத்துகிறவர் (உம்: ஒழுக்கக்கேடு அல்லது குற்றச்செயல் உட்பட்டவை)

## தகவல் அறிவிப்பாளருக்கு வழங்கப்படும் பாதுகாப்பின் வகைகள்

- தகவல் அறிவிப்பாளரின் அடையாளம் இரகசியமாக வைக்கப்பட்டிருக்கும்
- தகவல் அறிவிப்பாளர் தரும் விபரங்கள் இரகசியமாக வைக்கப்பட்டிருக்கும்
- தகவல் அறிவிப்பாளர் சிவில் மற்றும் கிரிமினல் எதிர் நடவடிக்கையில் இருந்து காக்கப்படுவதோடு அவருக்கு எதிராக ஒழுக்கக்கேட்டு தண்டனை வழங்கப்படாது.
- மிரட்டல், வன்முறை, சட்டப்பூர்வமான முதலாளியின் குறுக்கீடு போன்ற தரப்பினால், காயம், இழப்பு, சேதம் ஆகிய தீங்குகளில் இருந்து தகவல் தருபவர் பாதுகாக்கப்படுவர்.
- குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் தகவல் அறிவிப்பாளருக்கு நெறுங்கிய சொந்த பந்தங்கள் அனைவருக்கும் பாதுகாப்பு வழங்கப்படும்.

தகவல் அறிவிப்பாளர் பாதுகாப்பு சட்டம் 2010



# மலேசிய லஞ்ச ஒழிப்பு வாரியத்திற்குப் புகார் வழங்குதல்



## ஒரு புகார் வழங்குவதற்குத் தேவையான தகவல்கள்

- சம்பந்தப்பட்டவர்(கள்) விபரங்கள்
- சம்பவம் நடைபெற்ற தேதி, நேரம், இடம்
- பறிமாற்றத்திற்கான காரணம்
- பறிமாற்றப்பட்ட தொகையும் விதமும் (வடிவமும்)
- பிற சாட்சிகளின் அடையாளங்கள், (ஸ்தலம் அல்லது தகவல் உடையோர்) இருந்தால்.
- சம்பவம் தொடர்பான ஏதாவது ஆவணம், தகவல் அல்லது காணக்கூடிய ஆதாரம்

ஓர் ஊழலைப் புகார் செய்யத் தவறுவதும் குற்றம் என்பது உங்களுக்குத் தெரியுமா?

s.25 MACC Act



# மலேசிய லஞ்ச ஒழிப்பு வாரியத்திற்கு ஊழலை புகார் செய்யும் வழிகள்



## மலேசிய லஞ்ச ஒழிப்பு ஆணையத்திற்கு தகவல் தருவிக்கும் மார்க்கங்கள்

1800 886 000

info@sprm.gov.my

www.sprm.gov.my

019 600 0696

03 8889 4329

MACC, Block D6, Complex D,
Federal Govt. Administrative Centre,
P.O.Box 6000,
62007 Putrajaya, Malaysia

OR

பிற மாநிலங்களில் செயல்படும் அதன் கிளைகள்

மலேசிய லஞ்ச ஒழிப்பு வாரியத்தின் MACC's P.O. Box 6000 என்ற முகவரிக்கு தபால் தலை இல்லாமல் கடிதம் அனுப்பலாம் என்பது உங்களுக்குத் தெரியுமா?



# ஊழல்
# தரவுகள்

வழங்குவது

TRANSPARENCY INTERNATIONAL
the global coalition against corruption

ஊழல் புலனுணர்வு குறியீடு என்பது 175 தேசங்களின் அரசாங்கத் துறையில் உணரப்படுகிற ஊழல் நிலவரங்களின் குறியீட்டு முறைமை ஆகும்.
ஒவ்வொரு நாட்டிலும் பல்வேறு கீர்த்தி பெற்ற 12 கணக்கெடுப்பு மற்றும் மதிப்பீட்டு கூட்டமைப்பால் தொகுக்கப்பட்ட மதிப்பெண்கள்

# CPI (2014)

## ஊழல் புலனுணர்வு குறியீடு




ஆதாரம்
http://www.transparency.org/cpi

2014ல் ஊழல் புலனுணர்வு குறியீட்டின் 175 நாடுகளில் மலேசியா 50வது இடத்தைப் பிடித்திருக்கிறது.

| தரநிலை | தேசம் | மதிப்பெண் |
|---|---|---|
| 39 | ஸ்லோவேனியா | 58 |
| 42 | கேப் வேர்ட் | 57 |
| 43 | கொரியா (தெற்கு) | 55 |
| 43 | லாத்வியா | 55 |
| 43 | மால்ட்டா | 55 |
| 43 | சீசெல்சு | 55 |
| 47 | கோஸ்டா ரிகா | 54 |
| 47 | ஹங்கேரி | 54 |
| 47 | மொரிஷியஸ் | 54 |
| 50 | ஜோர்ஜியா | 52 |
| 50 | மலேஷியா | 52 |
| 50 | சமோவா | 52 |
| 53 | செக் குடியரசு | 51 |
| 54 | ஸ்லோவாகியா | 50 |
| 55 | பஹ்ரைன் | 49 |
| 55 | ஜோர்டான் | 49 |
| 55 | லெசோத்தோ | 49 |
| 55 | நமீபியா | 49 |
| 55 | ருவாண்டா | 49 |
| 55 | சவுதி அரேபியா | 49 |

| | | |
|---|---|---|
| 61 | குரோஷியா | 48 |
| 61 | கானா | 48 |
| 63 | கியூபா | 46 |
| 64 | ஓமன் | 45 |
| 64 | மாசிடோனியா எ.ஃ.ப்ஓய்ஆர் | 45 |
| 64 | துருக்கி | 45 |
| 67 | குவைத் | 44 |
| 67 | தென் ஆப்ரிக்கா | 44 |
| 69 | பிரேசில் | 43 |
| 69 | பல்கேரியா | 43 |
| 69 | கிரீஸ் | 43 |
| 69 | இத்தாலி | 43 |
| 69 | ருமேனியா | 43 |
| 69 | செனகல் | 43 |
| 69 | சுவாசிலாந்து | 43 |
| 76 | மொண்டெனேகுரோ | 42 |
| 76 | சாவோ டொமே மற்றும் பிரின்சிப்பி | 42 |
| 78 | செர்பியா | 41 |
| 79 | துனிசியா | 40 |
| 80 | பெனின் | 39 |

உலகளாவிய ஊழல் வாரியம், ஊழல் தொடர்பாக மக்கள் கருத்தைத் தொகுக்கிறது.

107 நாடுகளில் வாழும் 114,000 பேர் கடந்த 2013ம் ஆண்டில் இந்தக் கணக்கெடுப்பில் கலந்து கொண்டனர்.

## GCB (2013)

உலக லஞ்ச அளவை 2013




பொதுவாக, அரசியல் கட்சிகள் முன்னிலை வகிக்கும் நிலையில், காவல் துறை அடுத்த இடத்தைப் பிடித்துள்ளது

ஆதாரம்
http://www.transparency.org/gcb2013/results



# உலக லஞ்ச அளவை 2013
# மலேசியா 2013

மலேசியாவில் இந்த நிறுவனங்கள் ஊழலால் பாதிக்கப்பட்டுள்ளது என்று கருதுகிறவர்களின் விழுக்காடு

**76%** காவல் துறையினர் ஊழல் மிக்கவர்கள் என்று கருதுகின்றனர்

**46%** பொதுச் சேவை அதிகாரிகள் ஊழல் மிக்கவர்கள் என்று கருதுகின்றனர்

**40%** வர்த்தகர்கள் ஊழல் மிக்கவர்கள் என்று கருதுகின்றனர்

**22%** ஊடகங்கள் ஊழல் மிக்கவை என்று கருதுகின்றனர்

**13%** கல்வி துறை ஊழல் மிக்கது என்று கருதுகின்றனர்

**9%** மருத்துவம் மற்றும் சுகாதாரத் துறை ஊழல் மிக்கவை என்று கருதுகின்றனர்

**69%** அரசியல் கட்சிகள் ஊழல் மிக்கவை என்று கருதுகின்றனர்

**44%** நாடாளுமன்றம் ஊழல் மிக்கது என்று கருதுகின்றனர்

**35%** நீதி பரிபாலனத் துறை ஊழல் மிக்கது என்று கருதுகின்றனர்

**17%** சமூக அமைப்புகள் ஊழல் மிக்கவை என்று கருதுகின்றனர்

**10%** ராணுவம் ஊழல் மிக்கது என்று கருதுகின்றனர்.

**6%** சமய அமைப்புகள் ஊழல் மிக்கவை என்று கருதுகின்றனர்

ஆதாரம்
http://www.transparency.org/gcb2013/country/?country=malaysia



# உலகளாவிய ஊழல் வாரியம் மலேசியா

வழங்குவது

TRANSPARENCY INTERNATIONAL MALAYSIA



## மலேசிய ஊழல் அளவை 2014

ஓர் ஊழல் சம்பவத்தை நீங்கள் புகார் செய்வீர்களா?

**ஆம் (51%)** | **இல்லை (49%)**

ஏன் இல்லை?




ஊழல் பற்றி மலேசியர்களின் கண்ணோட்டத்தை மலேசிய ஊழல் அளவை நிறுவனம் கணக்கிடுகிறது.

அதில் இடம் பெறும் ஒரு கேள்வி, ‘ஓர் ஊழல் சம்பவத்தை நீங்கள் புகார் செய்வீர்களா?’, என்பதாகும்.

மலேசியா முழுவதும் 2,000 பேர் இந்தக் கணக்கெடுப்பில் கலந்து கொண்.

ஆதாரம்
http://transparency.org.my/what-we-do/indexes/global-corruption-barometer/ti-m-2014-malaysia-corruption-barometer-mcb-results/



# மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள்



# அரசாங்கத்தின் முக்கிய ஊழல் தடுப்பு முயற்சிகள்



## சட்ட அமைப்பு முறை

- ஊழல் தடுப்புக்காக மலேசிய ஊழல் தடுப்பு ஆணையம் நிறுவப்பட்டது
  மலேசிய ஊழல் தடுப்புச் சட்டம் 2009
- அமலாக்கத் துறைக்கு முறைகேடான நடவடிக்கைகளை புகார் செய்வோருக்குப் பாதுகாப்பு வழங்கப்படுகிறது.
  புகார் செய்வோர் பாதுகாப்புச் சட்டம் 2010
- 21 அமலாக்க முகமைகளின் முறைகேடான நடவடிக்கைகளைக் கையாள அமலாக்க முகைமையின் நம்பகத்தன்மை வாரியம் அமைக்கப்பட்டது. குடிநுழைவு இலாகா, மலேசிய அரச சுங்கத்துறை, பதிவு இலாகா, வனவிலங்கு மற்றும் தாமான் நெகாரா பாதுகாப்பு இலாகா, ஊழியர் இலாகா மற்றும் மலேசிய அரச காவல் துறை போன்றவற்றை இது உட்படுத்தியுள்ளது.
  அமலாக்க முகமை நம்பகத் தன்மை வாரியச் சட்டம் 2009

## பிற முயற்சிகள்

- முக்கிய அமலாக்க நிறுவனங்களில் புகார் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, மலேசிய ஊழல் தடுப்பு வாரியம், காவல் துறை, போக்குவரத்துத் துறை, சுங்கைத் துறை மற்றும் குடிநுழைவுத் துறை
- 14 சிறப்பு ஊழல் தடுப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் பணியாற்றும் நீதிபதிகள் வழக்கு விசாரனைகளை ஓராண்டுக்குள் முடித்துவிட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளனர்.
- ‘என் கொள்முதல்’ வலைத் தளத்தில் அரசாங்கக் கொள்முதல் தகவல்களை வெளிப்படுத்துதல் http://myprocurement.treasury.gov.my
- ‘பெயரும் அவமானமும்’ என்ற பட்டியலில் ஊழலில் ஈடுபட்ட அதிகாரிகளின் பெயர்கள் பட்டியலிடப்படும் http://www.sprm.gov.my/name-and-shame.html
- ஊழல் தடுப்புக்காக ஐக்கிய நாட்டு மாநாட்டின் வடிவமைப்பை நிலைநாட்டுதல். http://www.cpps.org.my/Resources-@-United_Nations_Convention_Against_Corruption.aspx






# முக்கிய அம்சங்கள்

## 3 கூரிய அணுகுமுறைகள

**அமலாக்கம்**
துப்பறிந்து விசாரனை நடத்துதல்

**கல்வி**
ஊழல் விழிப்புக் கல்வி மக்களுக்குக் கொடுக்கப்படுகிறது

**தடுப்பு**
ஊழல் மீண்டும் மீண்டும் நிகழாமல் இருக்க அவ்வப்போது அப்பியாசங்களையும் நடைமுறைகளையும் மறு ஆய்வு செய்தல்

## ஆட்சியின் கட்டமைப்பு

5 சுயேட்சை நிறுவனங்கள் மலேசிய ஊழல் தடுப்பு ஆணையத்தின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கின்றன. அவற்றின் முக்கிய 2 நிறுவனங்கள்:

- இந்தச் சிறப்புக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுவர் அங்கம் வகிப்பர். இவர்கள் மலேசியாவின் ஊழல் பிரச்சனைகள் தொடர்பாக பிரதமருக்கு ஆலோசனை வழங்குவர். s.14, MACC Act
- புகார் குழுவில் ஐந்துக்கும் மேற்போகாத உறுப்பினர்கள் இருப்பர். இவர்களை ஒரு அமைச்சர் நியமனம் செய்வார். இவர்கள் புகார்களையும் அத்து மீறல்களையும் விசாரிக்கும் மலேசிய ஊழல் தடுப்பு அதிகாரிகளை மேற்பார்வை செய்வர். s.15, MACC Act

* ஊழல் தடுப்பு ஆலோசனை வாரியம், நடவடிக்கை மறு ஆய்வு வாரியம், ஊழல் தடுப்பு ஆலோசனை மன்றம் ஆகியன இதர 3 அமைப்புகள் ஆகும்.






TRANSPARENCY
INTERNATIONAL
MALAYSIA

## நாங்கள் யார்?

மலேசிய டிரான்ஸ்பிரான்சி இன்டர்நேஷனல் ஒரு சுயேட்சையான, அரசாங்க சார்பற்ற, எதனோடும் பங்கு வகிக்காத ஊழலைத் தடுப்பதற்கான நிறுவனம் ஆகும்.பெர்லினைப் பின்பற்றும் பன்னாட்டின் வெளிப்படையான தேசியக் கட்டுமானத்தின் அதிகாரம் ஆகும்.

## எங்கள் தரிசனம்

ஊழலால் பாதிக்கப்படாத நாடு

## நாங்கள் எப்படிச் செயல்படுகிறோம்

ஊழலைத் துடைத்தொழிக்கவும், நம்பகத் தன்மையைப் பெருக்கவும் நாங்கள் தனியார், பொது மக்கள், அரசாங்கம், ஊடகம், மற்றும் அனைத்துத் தரப்பினருடனும் ஒத்துழைக்கிறோம்.

## நாங்கள் என்ன செய்கிறோம்

எங்கள் திட்டங்களில் சில

- வன நிர்வாக நம்பகத் திட்டம்
- வர்த்தக நம்பகத் திட்டம்
- அரசியல் நிதி நிர்வாக மறுமலர்ச்சி
- இளைஞர் நம்பக ஊக்குவிப்பு
- குரல் எழுப்பும் பிரச்சாரம்

மேல் விபரங்களுக்குப் பின்வரும் இணையத் தளத்திற்குச் செல்க:
**www.transparency.org.my**



# மலேசிய இன்டர்நேஷனல் டிரான்ஸ்பிரான்சியின் சேவைகள்



## சமுதாயச் சந்திப்புகளும் கைப்பேசி சேவைகளும்

சமுதாயச் சந்திப்புகளும் கைப்பேசி சேவைகளும் விழிப்புணர்ச்சியை அதிகரித்தலும் குடிமக்கள் ஊழலைத் துடைத்தொழிக்கும் தங்கள் கடமையை உணர்த்துவதும்

## பட்டறைகள்

## கட்டணமில்லா தொலைபேசி சேவை

கட்டணமில்லா தொலைபேசி சேவை புதிய கட்டணமில்லாத தொலைபேசி சேவை 1800 220 122

ஊழல் தொடர்பான விவகாரங்களைப் பற்றி இந்தக் கட்டணமில்லா தொலைபேசி சேவை இரகசியமான மற்றும் இலவச ஆலோசனை வழங்குகிறது.

மலேசிய ஊழல் தடுப்பு வாரியத்திற்குப் புகாரைக் கொண்டு செல்ல உதவுகிறது

குறிப்பு: கட்டணமில்லா தொலைபேசி சேவை புகார்களை விசாரிப்பதில்லை

## நேரடித் தகவல்

## சட்ட ஆலோசனை

அரசாங்கம் ஆய்வு, தரவு, கண்டுபிடிப்பு, புகார் அடிப்படையில் ஊழலைத் தடுப்பதற்கு வலியுறுத்துகிறது.

பிற சமூக அமைப்புகளோடு ஒத்துழைக்கிறது. உம்- நல்லாட்சி, நம்பகத் தன்மை, நாணயம், வெளிப்படையான கூட்டமைப்பு (கியாட்)



# ஊழலுக்கு எதிராக நீங்கள் என்ன செய்ய முடியும்?

**குரல் கொடுங்கள்**
புகார் செய்யுங்கள்

**‘வேண்டாம்’ என்று சொல்லுங்கள்**
லஞ்சம் கொடுக்கவோ, வாங்கவோ வேண்டாம்

**கேள்வி எழுப்புங்கள்**
ஊழல் வழக்கத்திற்குச் சவால் விடுங்கள்

**உங்கள் உரிமையை அறியுங்கள்**
உங்கள் குரலை வளப்படுத்த அதிகத் தகவல் பெறுங்கள்

**நன்னெறியை வாழ்க்கையில் செயல்படுத்துங்கள்**
நம்பகத் தன்மை, நாணயம், நடுநிலைமை ஆகிய நற்பண்புகளை அப்பியாசப்படுத்துங்கள்




# ஊழலுக்கு எதிரான பிரகடனம்



## ஊழலுக்கு எதிரான எனது பிரகடனம்

அடையாளமிடவும்

- ☐ நான் லஞ்சம் கொடுக்க மாட்டேன்
- ☐ நான் லஞ்சத்தை நாட மாட்டேன்
- ☐ ஊழலுக்கு எதிரான பிரச்சாரத்திற்கு நான் பிறரோடு ஒத்துழைப்பேன்
- ☐ நான் ஊழலுக்கு எதிராகக் குரல் கொடுப்பதோடு துஷ்பிரயோகத்தைப் புகார் செய்வேன்
- ☐ ஊழலை எதிர்ப்பவர், வெளிப்படை, நம்பகத் தன்மை, நாணயத்தைச் செயல்படுத்தும் வேட்பாளரையே நான் ஆதரிப்பேன்.

கையொப்பம் தேதி

# அதிகமாகக் கேட்கப்படும் கேள்விகள்

**1 எப்படிப்பட்ட சூழலில் ஊழல் நுழைகிறது?**

ஊழல், இச்சை இடம் கொடுக்கும் போது நுழைகிறது: ஒருவரின் அதிகாரம் சோதிக்கப்படாத பட்சத்தில், தீர்மானங்கள் இரகசியப்படுத்தப்படும் போது, பொது மக்களுக்கு ஆளுமை இல்லாத போது அது தலை தூக்குகிறது. எனவே, இவற்றைக் கட்டுப்படுத்துவதற்காகவும் தடுப்பதற்காகவும் ஒரு கட்டுப்பாட்டு முறைமை தேவைப்படுகிறது.

**2 'வெளிப்படைத் தன்மை' என்றால் என்ன?**

சட்டம், திட்டம், செயலாக்கம் மற்றும் நடவடிக்கைக்கு வெளிச்சம் காட்டுவது வெளிப்படைத் தன்மை. ஏன், எப்படி, எதற்கு, எவ்வளவு போன்ற வினாக்களுக்கு இது விடை காண்கிறது. வெளிப்படைத் தன்மை அரசாங்க அதிகாரிகள், ஊழியர்கள், நிர்வாகிகள், வாரிய உறுப்பினர்கள் மற்றும் வர்த்தகர்கள் பிறர் பார்வையிலும் அறிவுக்கும் உட்பட்டுச் செயல்படச் செய்து அவர்களின் நடவடிக்கைகளை அறிவிப்பதாகும். பொதுவாக மக்கள் அவர்களின் நடவடிக்கைகளை நம்பகத் தன்மை வட்டத்துக்குள் கட்டுப்படுத்துகிறார்கள். இதுவே ஊழலுக்கு எதிராகச் செயல்படுவதற்கு திட்டமான வழியாகும். அத்தோடு நமது எதிர்காலம் சார்ந்திருக்கிற மக்கள் மற்றும் நிறுவனங்கள் மீது நமது நம்பிக்கையை அதிகரிக்கச் செய்கிறது.

**3 ஊழலை நீங்கள் எப்படி அளவீடு செய்யலாம்?**

லஞ்ச நடவடிக்கை மறைமுகமாகவும் இரகசியமாகவும் நிகழ்கிறது. கண்ணுக்குத் தெரிவது குத்துமதிப்பானது மாத்திரமே. ஒரு தேசத்தில் மக்களின் புலனுணர்வுகள் ஊழல் பற்றிய மேலோட்டமான நம்பகத் தன்மையையே தருகிறது என்று ஆய்வு காட்டுகிறது. நாட்டின் ஆய்வாளர்கள், வர்த்தகர்கள் அல்லது பொது மக்கள் ஆகியோரின் புலனுணர்வுகள் மேலோட்டமான தகவலையே தருகின்றன.

**4 ஊழலை எங்கே புகார் செய்யலாம்? மேல் முறையீட்டுக்கு ஏதாவது வழி இருக்கிறதா?**

ஊழல் தடுப்பு வாரியத்திற்கு ஏதாவது ஒரு வாயில் மூலம் புகார் செய்யவும். பிரதமர் அமைச்சின் கீழ் செயல்படும் பொதுப் புகார் பிரிவிலும் புகார் செய்யலாம். இங்கு 15 நாட்களில் பிரச்சனைக்குத் தீர்வு காண வழி வகை செய்யப்படுகிறது. அல்லது 21 அமலாக்கத் துறையைக் கண்காணிக்கும் அமலாக்க நிறுவன நம்பகத் தன்மை வாரியத்திடமும் புகார் செய்யலாம்.

**5 ஊழலைக் குறைப்பதற்கு பறிந்துரைகள் என்ன?**

- வழுவான அரசியல் நடப்பில் இருக்க வேண்டும்
- அரசாங்க அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் தங்கள் சொத்துடைமைகளைப் பிரகடனம் செய்ய வேண்டும்
- அரசியல் நிதி நிர்வாகம் வெளிப்படையாக இருப்பதற்கு முழுமையான ஒருங்கிணைப்பு தேவை
- அரசாங்கமும் மக்களும் கரங் கோர்த்து செயலாற்றும் வகையில் பன்னாட்டு அரங்கம் அமைக்கப்பட வேண்டும்
- திறந்த ஏலம் மூலம் குத்தகை வழங்கப்பட வேண்டும்
- பல் முனை ஒழுக்கக் கண்காணிப்பு செயலாக்கக் குழு அமைக்கப்பட வேண்டும். இதனை தலைமை கணக்காய்வாளர் துறை கண்காணிக்க வேண்டும் வளர்ச்சி, நிலையான நிதி நிலவரம், முதலீடு, வர்த்தகம் ஆகியவற்றைக்
- ஒருங்கிணைக்க ஆசியான் ஊழல் தடுப்பு செயல்பட வேண்டும்

# என் குறிப்புகள்

நன்றியுடன்:

TRANSPARENCY INTERNATIONAL

Activity supported by the
Canada Fund for Local Initiatives

நடவடிக்கைகள் உள்ளூர் முயற்சிகளுக்கான கனடாவின் ஆதரவு
என்ற நிறுவனத்தால் ஆதரிக்கப்படுகிறது

Canada

# ஊழலுக்கு எதிராக குரல் கொடுங்கள்

இப்போதே செயல்படுங்கள்! அழையுங்கள
கட்டணமில்லா தொலைபேசி எண்

**1800 220 122**

காலை **9.00** – மாலை **4.00**, திங்கள் - வெள்ளி

www.transparency.org.my speakup@transparency.org.my facebook.com/timalaysia twitter.com/TI_Malaysia

TRANSPARENCY INTERNATIONAL MALAYSIA